# A Study Focusing on Yeladhi as a Doctor

**V. Kumarajeya Devi**
*Doctoral Researcher, Registration No: 2421327012001*
*Vivekananda College, Agastheeswaram, Kanyakumari District*
*Manonmaniam Sundaranar University, Abishekapatti, Tirunelveli*

**Dr. Ramakumar**
*Assistant Professor, Tamil Research Centre, Vivekananda College*
*Agastheeswaram, Kanyakumari District*
*Manonmaniam Sundaranar University, Abishekapatti, Tirunelveli*

**மலர்: 10**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: அக்டோபர்**

**வருடம்: 2025**

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17255972

**Abstract**

*In today"s society, men and women are generally seen as equals, but gender discrimination persists in some places. Although women now participate in many fields alongside men, traditionally men were viewed as superior, leading to women"s exclusion from many areas. Over time, women have begun to excel in various fields, proving their abilities and breaking down the old barriers of discrimination. If society guarantees equal rights for both genders, women will rise and succeed in all areas.*

***Keywords:*** *Yeladhi, Vaazhviyalneri, Veeduperu, Arassinthanai*

**References**

1. Pathinenkeelkanakku Noolgal, Chennai Noolagam.
2. https://tinyurl.com/ykk3fnu3, Yelathi - Tamil Wikipedia

# ஏலாதி எனும் மருத்துவர்

***வ. குமரஜெயதேவி***
முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண் : 2421327012001
விவேகானந்தா கல்லூரி, அகஸ்தீஸ்வரம், கன்னியாகுமரி மாவட்டம்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், அபிசேகப்பட்டி, திருநெல்வேலி

***முனைவர் இரா. இராமகுமார்***
உதவிப் பேராசிரியர், தமிழுயராய்வு மையம்
விவேகானந்தா கல்லூரி, அகஸ்தீஸ்வரம், கன்னியாகுமரி மாவட்டம்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், அபிசேகப்பட்டி, திருநெல்வேலி

***ஆய்வுச் சுருக்கம்***
*மனிதன் வாழ்வில் தான் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிமுறைகளின் வழிகாட்டியாக ஏலாதி திகழ்கிறது. வாசனைப் பொருள்களை உவமையாகக் கொண்டு , மனிதனின் வாழ்நாள் நல்லொழுக்கத்தின் மகத்துவத்தை ஒரு மருத்துவர் போன்று எடுத்துரைக்கின்றது. உடல் நோய் தீர்க்கும் மருத்துவரைப் போல, மனிதனின் உள்ளத்து நோயை அறநெறி வழியில் விரட்டுகிறது. நல்லொழுக்கம் என்பதையே நாடித்து டிப்பாக வைத்திருக்கும் ஏலாதி, சமூக வாழ்வியலில் மேலாதிக்கம் செலுத்துகிறதென்றால் அது மிகை ஆகாது. தனி நபர் சார்ந்த வாழ்க்கை, குடும்ப சமூக அரசியல் ஆகியவற்றில் மனிதன் தன்னை மேம்படுத்த தேவையான அறநெறி உரைகளைக் கூறுகின்றது.*
***திறவுச்சொற்கள்:*** *ஏலாதி, வாழ்வியல் நெறி, வீடுபேறு, அறச்சிந்தனை*

***முன்னுரை***

வாசனைப் பொருள்களை உவமையாகக் கொண்டு, மனிதனின் வாழ்நாள் நல்லொழுக்கத்தின் மகத்துவத்தை ஒரு மருத்துவர் போன்று எடுத்துரைக்கின்றது. உடல் நோய் தீர்க்கும் மருத்துவரைப் போல, மனிதனின் உள்ளத்து நோயை அறநெறி வழியில் விரட்டுகிறது. நல்லொழுக்கம் என்பதையே நாடித்துடிப்பாக வைத்திருக்கும் ஏலாதி, சமூக வாழ்வியலில் மேலாதிக்கம் செலுத்துகிறதென்றால் அது மிகை ஆகாது. தனி நபர் சார்ந்த வாழ்க்கை, குடும்ப சமூக அரசியல் ஆகியவற்றில் மனிதன் தன்னை மேம்படுத்த தேவையான அறநெறி உரைகளைக் கூறுகின்றது. பதிணென் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான ‘ஏலாதி” ஓர் சிறந்த வாழ்வியல் நீதிநெறி நூல்களுள் ஒன்றாகும். குறைந்த அளவு பாடல்கள் கொண்டிருந்தாலும் தரமான நீதிநெறி சிந்தனைகளை எளிமையான முறையில் எடுத்துக்கூறுகிறது. ‘ஏலாதி” ஒவ்வொரு மனிதனும் தமது வாழ்நாளில் கடைபி டிக்க வேண்டிய, பிறருக்கு கற்பிக்க வேண்டிய ஒழுக்கவியலின் வழிகாட்டியாகத் திகழ்கிறது. சிறிய நூலாக இருந்தாலும் சீரிய எண்ணங்களை எடுத்தியம்பும் ஓர் ஒப்பற்ற நூலாகத் திகழ்கிறது.

***ஏலாதி***

ஏலம் முதலாகக்கொண்ட ஆறு பொருள்கள் சேர்ந்த ஒருவகை மருந்தாகும். இந்நூலின் ஆசிரியர் கணிமேதாவியார் ஆவர். இவர் மாக்காயரின் மாணாக்கராவார். இந்நூலில் அருகக்கடவுளுக்கு வாழ்த்துப்

பாடல் அமைந்து உள்ளது. இந்நூல் சமண சமயம் சார்ந்த சிந்தனைகள் குறிக்கப் படுவதால் இந்நூல் ஆசிரியர் சமண சமயம் சார்ந்தவர் என்று கூறுகின்றனர். இந்நூலில் கடவுள் வாழ்த்து நீங்கலாக எண்பது பாடல்கள் உள்ளன. ஆறுபொருள்களில், நீதியை நான்கு அடிப்பாடல்களில் அடக்குகிறது இந்நூல்.

**நான்மறை ஒழுக்கம்**

புகழ், சேவல், மேன்மையாகக் கொள்ளும் சொல், வீரத்தில் அசையாது நின்ற நிலை, கல்வி, வரையாது கொடுத்தல் ஆகிய இவ் ஆறும் நான்மறையொழுக்கமாகும். இத்தகைய ஒழுக்கம் உடையாரிடத்திலேயே அழகு பெறும் என்பதனை,

**"சென்ற புகழ் செல்வம் மீக்கூற்றம் சேவகம்**
**நின்ற நிலை கல்வி வள்ளன்மை - என்றும்**
**அளிவந்து ஆர் பூங்கோதாய்! - ஆறும் மறையின்**
**வழிவந்தார் கண்ணே வனப்பு."**

**(ஏலாதி 01)**

இப்பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

**மறுமையில் இன்பம்**

ஏலாதி மறுமையிலும் ஒருவனுக்கு இன்பம் உண்டாகும் வழிகளை,

**"இன்சொல் அளாவல் இடம் இனிது ஊண் யாவர்க்கும்**
**வன்சொல் களைந்து வகுப்பானேல் மென்சொல்**
**முருந்து ஏய்க்கும் முள்போல் எயிற்றினாய் - நாளும்**
**விருந்து ஏற்பவர் விண்ணோர் விரைந்து."**

**(ஏலாதி 07)**

என்னுமடிகளில், தன மனைநோக்கி வரும் விருந்தினர் யாவரிடத்தும் இன்சொற் கூறலும், கலந்துறவாடலும், இருக்கை உதவலும், அறுசுவை அளித்தலும், கடுஞ்சொல் லொளித்தலும், மென்சொல்லால் சிறப்பித்தலும் ஆகிய இவைகள் எக்காலமும் ஒருவனை வானோர் விருந்தினனாய் ஏற்றுக்கொள்வார். அதாவது மறுமையிலும் இன்பமுண்டாகும் விதத்தினை குறிப்பிட்டுள்ளன.

**அமைச்சர்க்குரிய இயல்புகள்**

ஏலாதி அமைச்சர்களுக்குரிய இயல்புகளாக குடிகளைப் பாதுகாத்தலும்,நல்லறமும், கலங்காத அறிவும், சோம்பல் இல்லாமையும், அரசாட்சியைப் பாதுகாத்து, நாற்றம்,சுவை, கேள்வி இவற்றைப் பெற்று, நல்லவவர்களுடன் சேர்தலும் இவை நன்மை தருவனவென்று துணிவானாயின் அவன் அமைச்சனாக தேர்ந்தெடுக்கப்படுவான்.

**துறவை விட மேலானது**

ஒருவன் தனது ஆசைகள் அனைத்தையும் துறந்து துறவு வழியில் தனது வாழ்நாளைக் கழிக்கிறான். "ஆசையே அழிவுக்கு வழி" என்கிறார் புத்தர். அத்தகைய ஆசைகளை விட்டொழித்து, மறுமையை நோக்கிப் பயணிக்கும் துறவறத்தை விட மேலானதாகவும் இனிதானதாகவும் ஏலாதி எடுத்துக்காட்டுகிறது.

துறவிகளுக்கு ஈதலும், கல்வி கற்றவருக்கு இனிய சொற்களைக் கூறுதலும், தனக்குத் தீமை செய்தவர்களையும், தம் உறவினர்களையும் மதித்து போற்றுவானாயின் அவனது இல்வாழ்க்கை, துறவு வாழ்க்கையை விட இனிதானதாகும்.

பிணியும், பிறப்பும், மூப்பும், சாக்காடும், முயற்சியால் வரும் துன்பம், போதும் என்று நினையாமல் வரும் வறுமைத் துன்பம் இவைகள் உடனே உடனே நிகழும். புதுவிதமான கோலத்தில் வரும் நாடகக் கலைஞர்கள் போல் மாறி மாறி பிறக்காமல் துறவொழுக்கத்தை ஒருவன் எய்துவானானால் அவனுக்கு இன்பம் உண்டாகும் என்றும் ஏலாதி கூறுகிறது. மேலும்,

**"மனை வாழ்க்கை மாதவம் என்று இரண்டும் மாண்ட**
**வினை வாழ்க்கையாக விழைப - மனை வாழ்க்கை**
**பற்றுதல் என்ட்ரி விடுதல் முன் சொல்லும் மேல்**
**பற்றுதல் பாத்து இல் தவம்."**

**(ஏலாதி 73)**

என்னும் பாடலடிகள், இல்லற வாழ்க்கை என்பது பற்றுடன் வாழ்வதாம். பற்றில்லாத தவ வாழ்க்கை என்பது வீடுபேற்றில் பற்றுடன் வாழ்வதாகும், என்பதினை உணர்த்தியுள்ளது.

### பிறப்பு, இறப்பு, காலன்

பிறப்பு, இறப்பு என்பது இயற்கையின் நியதி. அதை எவராலும் மாற்றவோ மறைக்கவோ முடியாது. காலன், நாம் அழுது புலம்பினாலும் எவரையும் விடுவதில்லை, இரக்கப்படுவதும் இல்லை. அவனுக்கு பயந்து எங்கும் ஓடி ஒளிந்து கொள்ளவும் முடியாது. அவனை குலதெய்வமாக வழிபடுகிறோம் என்று கூறினாலும் விடமாட்டான். ஆதலால் காலனின் வரவிற்காக கொஞ்சம் கூட யோசிக்காமல் தவம் புரியாமல் வாழ்க்கையை வீணாக்குவது தவறு என்று விளக்கும் விதமாக ஏலாதியின் முப்பத்தி ஏழாவது பாடலில் "அழப்போகான் அஞ்சான் அலறினால் கேளான்" எனத் தொடங்கும் பாடல் வரிகள் தெளிவாகக் கூறுகிறது. இறப்பும் பிறப்புமாகிய துன்பம், கல்வி அறிவினாலேயோ அல்லது இறைவனை துதிக்கும் பாடல்களினாலேயோ மாறாது. சிறந்த ஒழுக்கங்களினாலும் தவத்தினாலுமே மாறும். மேலும் ஒழுக்கம் கெட்டு இறைவழிபாடு செய்வது பெரிய தவறாகும் என்பதனை,

> **"எழுத்தினால் நீங்காது எண்ணால் ஒழியாது ஏத்தி**
> **வழுத்தினால் மாறாது மாண்ட ஒழுக்கினால்**
> **நேராமை சால உணர்வார் பெருந்தவம்**
> **போகாமை சாலப்புலை". (ஏலாதி 38)**

எனும் பாடல் வரிகள் மூலம் ஏலாதி நமக்கு விளக்குகிறது. அதோடு விடாமல் இறப்பது எளிது, நல்ல பெயர் எடுப்பது அரிது. நல்ல பொருளை அடைவது எளிது, வாய்மையைக் காப்பாக கொள்வது கடினம். தனக்குத் துணையாகும் தவத்திற்குச் செல்வது எளிது, ஆனால் கீழ்மையில் இருப்பது கடினம். தெளிந்த ஞானியாக இருந்தாலும் ஐம்புலன்களையும் வென்று காட்டுவது கடினம் என்பதனை, ஏலாதி "சாவது எளிது அரிது சான்றாண்மை நல்லது" (ஏலாதி 39) எனத் தொடங்கும் பாடல் மூலம் நன்கறியலாம். ஆரம்பத்தில் பிறப்பும் இறப்பும் இயற்கை, எப்படி அழுதாலும் அதனை மாற்ற முடியாது என்றும், காலன் வருவதை யாராலும் தடுக்க முடியாது என்றும் கூறிய ஏலாதி, பாடல் 38 இல் சிறந்த ஒழுக்கத்தினாலும், தவத்தினாலும் மாற்ற முடியும் என்கிறது. அது மட்டுமின்றி இறப்பது எளிது, ஆனால் வாழும் போது நல்லபெயரோடு வாழ வேண்டும் என்று ஏலாதி மக்களுகக்கு ஒழுக்க நெறி மருந்தினை போதிக்கிறது.

என்ன செய்தலும் காலன் வருவதை தடுக்க முடியாது என்று கூறிய ஏலாதி, அந்த காலனையே வராமல் தடுக்கும் அருமருந்தினையும் கற்றுக்கொடுக்கிறது. எமன் வராமல் இருக்க வேண்டுமானால் கடவுளின் நூல்களை விரும்பி கற்றுக் கொண்டு, மனத்தூய்மையுடன் கெடுதி இல்லாத சிறந்த தவத்தினைச் செய்தால் அவன் வீடுபேற்றினை அடைவான் என்று, "காலனார் ஈடு அறுதல்" என்னும் அடியால் கணிமேதாவியார் விளக்கியுள்ளார்.

### மகளிர்க்குக் கொடுக்கும் அறமருந்து

ஒரு குடும்பத்தின் ஆணிவேராகத் திகழும் பெண்டிர்க்குச் சில அறிவுரை கூறும் விதமாகவும் ஏலாதி பாடல் வரிகள் அமைகின்றது. முதலில் பெண்ணை வருணித்து, அதன் பின் அவளுக்கு அறிவுரை கூறும் விதமாக அமைகிறது. எப்போதுமே எடுத்த உடனே அறிவுரையை எல்லா பெண்களும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். பெண்களுக்கு மட்டும் அல்ல மனித சமுதாயத்திற்கே இக்கூற்றுப் பொருந்தும். எனவே முதலில் அவர்களை பெருமையாய் பேசி அதன் பின்பு அறிவுரை கூறப்படுகிறது.

'மை தீட்டிய பெரிய கண்களை உடைய மயில் போன்ற பெண்ணே!' என்று தொடங்குகிறது அதன் விளக்கம். அறிவுடையவர்கள் எப்போதும் உண்மையே உரைப்பர். பொய்யும், புறங்கூற்றும், கடும்சொல்லும்,பயனில்லாச் சொற்களும் அறிவில்லாதவர்களே சொல்வார்கள். ஆனால் நீயோ அறிவுடையவள் ஆகவே நெறிதவறாமல் நடக்க வேண்டும் என்கிறது என ஏலாதி எடுத்துரைத்துள்ளது. பெண்கள் எப்போதும் தன்னுடைய குலப்பெருமையைப் பாராட்டியும், பிறரின் துயரநிலையைக் கண்டு இகழ்ந்து வுரைத்தலும் ஆகாது. இதனை எப்போதும் பெண்கள் மனதில் வைத்திருக்க வேண்டும். வறியவர்க்கு வாரி வழங்குதல் போன்ற உயர்ந்த குணம் கொண்டவளாய் இருக்க வேண்டும் என்றுஅறிவுரை கூறுகிறது. சில பாடல்களில் பெண்களுக்கு அறிவுரை கூறுவது போன்று அமைந்து பின், ஒரு ஆண் இப்படித்தான் இருக்க வேண்டும் என்றும் வரையறை செய்கிறது ஏலாதி.

"பொய் உரையான் வையான் புறங்கூறான்" (ஏலாதி 33) என்னும் அடிகளின் வாயிலாக, மயில் தோகை போன்ற கூந்தலை உடையவளே, பிறர் தீங்கு கருதி பொய் பேசாமலும், இகழாமலும், தனக்குத் தீமை செய்திருந்தாலும் அவர்களை அவமதித்துப் பேசாமலும், ஒருவருக்கு ஏற்பட்டத் தீமைகளை போக்குவதற்காக நடந்த உண் மைகளை சொல்லாமலும், தன்னிடம் இருக்கும் பொருள்களை பெருமையாக பேசாமலும், தன் நண்பர்களிடம் வறுமையை சொல்லாதிருக்கும் ஒருவனே எந்த உலகத்தை விட்டு வானுலகிற் கூடியுள்ள தேவர்கட்குத் தலைவனாவான் என்று எடுத்துரைக்கிறது.

### சிறந்த நண்பன்

நண்பர்கள் எப்போதும் தனது நண்பனின் வருத்தத்தினை தன்னுடைய வருத்தமாகவே கருதுவர். நண்பர்களுக்குப் பொருள் கொடுத்தல், அவருடன் இனிய சொற்களை பேசி மகிழ வேண்டும். தனது நண்பனின் உள்ளக்கவலைகளை போக்கி அவனை மகிழ்விக்க வேண்டும். இவைகள் சிறந்த நண்பனுக்கு இருக்க வேண்டிய குணங்கள் ஆகும்.

**சாக்காடு, கேடு, பகை, துன்பம், இன்பமே,**
**நாக்கு ஆடு நாட்டு அறைபோக்கும், என**
**நாக் காட்ட,**
**நட்டார்க்கு இயையின், தமக்கு இயைந்த**
**கூறு, உடம்பு**
**அட்டார்வாய்ப் பட்டது பண்பு.**

***(ஏலாதி 79)***

### வாழ்த்துதல்

பண்டைய காலம் தொட்டு இன்றய காலம் வரை வாழ்த்துதல் என்பது மிகப் பெரிய மரபாகும். பெரியோர்கள் சிறியவர்களை வீட்டு விசேசங்களிலும், பிறந்த நாள் போன்ற சுப தினங்களிலும் வாழ்த்துவது வழக்கம். அவ்வாறு வாழ்த்தும் போது, கல்வி,செல்வம், ஆயுள் போன்றவைகள் பெருக வேண்டும் என்று வாழ்த்துவார்கள். ஆனால் ஏலாதியோ சிறிது மாறுபாடாக, நீ இன்ன இன்ன நல்ல விசயங்களை செய்தால் இவ்வாறு நலமாய் வாழ்வாய் என்று வாழ்த்தினை பெறும் வழிமுறைகளையும் வகுத்துக் கொடுக்கிறது. யானையும் குதிரையும் பொன்னும் கன்னிகையும் பசுவின் கூட்டமும் மற்ற பொருள்களும் வேண்டிய அளவிற்கு வகை அறிந்து கொடுத்தவனும், தவசிகளுக்குப் பசுவின் நெய்யுடன் உணவளித்து அன்பு செய்தவனும் ஆகிய ஒருவன் குபேர பட்டம் பெற்று வாழ்வான் என்கிறது ஏலாதி.

வரியவர்க்கு அன்புடன் எண்ணெயும் பருத்தி ஆடையும் கொடுத்து அவர்களுக்கு உணவினையும் கொடுத்து, ஏற்றுக்கொள்வீர்களாக என்று கொடுப்பவன் தன் மனைவி மற்றும் சுற்றத்தாரோடு இனிமையாக யாதொரு

தீங்கின்றி வாழ்வான் என்று குறிப்பிட்டுள்ளது.

**"எள்ளோ பருத்தியோ எண்ணெய் உடுத்தாடை**
**வள்ளே துணியே இவற்றோடு கொள்ளென**
**அன்புற்று அசனம் கொடுத்தான் - துணையினோடு**
**இன்புற்று வாழ்வான் இயைந்து".**

***(ஏலாதி 50 )***

### முடிவுரை

மனிதன் தோன்றிய காலத்தில் இருந்து தற்போது வரைக்கும் ஒவ்வொரு காலகட்டத்திலும் அவனது தீய எண்ணங்கள் பழக்கவழக்கங்கள் போன்றவற்றை களைவதற்காகவும் அவனை நல்வழிப்படுத்தவும் அறநெறி இலக்கியங்கள் வாயிலாகக் கருத்துகள் அறிவுரைகள் கூறப்படுகின்றன. அந்த கடமையில் இருந்து கொஞ்சம் கூட மாறாமல் ஏலாதியும் தனது பங்கினை ஆற்றியது என்பதனை இப்பாடல்கள் மூலம் நன்கு அறியப்படுகிறது. ஏலாதி தன்னுடைய ஒவ்வொரு பாடலிலும் ஆறு நீதிக்கருத்துகளைக் கூறி மக்களை நல்வழிப்படுத்துகிறது. இதனால் அறியாமை என்னும் நோய் நீங்குகிறது. ஒழுக்கநெறி மேலோங்குகிறது. ஆகவே சான்றோர்கள் ஏலம், இலவங்கம், சிறுநாவல்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய ஆறு பொருள்களால் சேர்த்து உருவாக்கப்பட்ட ஒரு மருந்து கலவை (சூரணம்) என்கிறார்கள். பெயருக்கு ஏற்றபடி சமுதாயத்தின் சீரமைப்பிற்கான மருந்தாக, நல்ல மருத்துவராக ஏலாதி திகழ்கிறது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை எனலாம்.

### கட்டுரைக்கு உதவிய நூல்கள்


1. பதினெண் கீழ்கணக்கு நூல்கள், சென்னை நூலகம்.
2. https://tinyurl.com/ykk3fnu
3. ஏலாதி - தமிழ் விக்கிபீடியா